**25.08.2022**

**OS.No. 389/2019 PW : 2, திரு. சுப்பிரமணி**

**6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

என்னுடைய வயது 65. எனக்கு எழுத, படிக்க தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதிகளை எனக்கு தெரியும். தாவா சொத்து விவரம் எனக்கு தெரியும். 1ம் வாதியின் தாத்தாவும், அவருடைய தம்பியும் திருமணத்திற்கு முன்னர் கூட்டு குடும்பமாக இருந்தார்களா என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகள் குடியிருக்கும் வீட்டில் இருந்து 4 வீடுதள்ளி ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது அதற்கு அருகில் என் வீடு இருக்கிறது. சந்திரசேகரின் அக்காவான ஈஸ்வரி என்பவரின் கணவரின் தம்பி தான் நான். வாதிகள் குடியிருக்கும் வீடு, கோயில் மற்றும் கிணறு உள்ள இடம் முருகன் வாங்கிய சொத்தா என்று கேட்டால் குப்புசாமி ரெட்டியார் வாங்கிய சொத்தாகும். அந்த கோவில் வேப்ப மரத்திற்கு அடியில் புற்றுஉள்ள 3 கல் வைத்து இருக்கும் கோயில் ஆகும். அது 3 அடி உயரத்தில் இருக்கும். சந்திரசேகர் வீட்டிற்கு பின்புறம் ஏழுமலை மற்றும் அவரது பேரன்களும் இருக்கிறார்கள். அந்த இடம் ஏழுமலைக்கு ஒதுக்கப்பட்ட சொத்தா என்றுகேட்டால் ஏழுமலை வேறு இடத்தில் வாங்கியிருக்கிறார். ஆனால் அந்த இடத்தில் ஏழுமலையில் மருமகள் அவுத்தி கீரை போட்டுள்ளார். ஏழுமலையின் மருமகள் தற்போது இருக்கும் இடம் குப்புசாமி ரெட்டியாரால் வாங்கப்பட்டது. அதை குப்புசாமி ரெட்டியார் ஏழுமலைக்கு கொடுத்துவிட்டாரா என்று எனக்கு தெரியாது. சந்திரசேகர் வீட்டிற்கு நான் போயிருக்கிறேனா என்று கேட்டால் நான் எப்போதாவது போவேன். ஏழுமலை மருமகள் வீட்டிற்கும்

செல்வேன். கிணறு மற்றும் கோயில் சந்திரசேகரின் வீட்டிற்கு பின்புறம் இருக்கிறது. கிணறு மற்றும் கோயில் சந்திரசேகர் இடத்தல் இருக்கிறது. சந்திரசேகருக்கு 2 வீடுகள் இருக்கிறது. அதில் ஓட்டு வீட்டிற்கு பின்புறம் கிணறு மற்றும் கோயில் இருக்கிறது. சந்திரசேகரின் புதுவீட்டிற்கு கிழக்கு பக்கம் அந்த கிணறு மற்றும் கோயில் இருக்கிறது. வாதிகள் குடியிருக்கும் வீட்டி பகுதியை பொறுத்து ஏழுமலையில் மருமகன் பிரச்சனை செய்யவில்லை. குப்புசாமி ரெட்டியாரின் மனைவி பெயர் தெரியாது. குப்புசாமி ரெட்யாருக்கு சுப்பிரமணி, பொன்னப்ப ரெட்டி, முருக ரெட்டி, முனுசாமி ரெட்டி ஆயோர்கள் மக்கள் ஆவார்கள். அவர்கள் ஒருவர் தான் உயிருடன் இருக்கிறார். கூட்டுகுடும்பமாக வாங்கிய சொத்தை எப்போது வாங்கினார்கள் என்று தெரியுமா என்று கேட்டால் எனக்கு தெரியாது. குப்புசாமி ரெட்டியார் தான் அந்த வீட்டை 45 வருடத்திற்கு முன்பு கட்டினார். ஏழுமலை ரெட்டி 5 வருடம் கழித்து வீடு கட்டினார். குப்புசாமி ரெட்டி 1980ல் வீடுகட்டினாரா என்று கேட்டால் அதெல்லாம் எனக்கு தெரியாது 45 வருடத்திற்கு முன்பு கட்டினார். 1ம் வாதி 1955ல் குப்புசாமி ரெட்டி கிரையம் வாங்கி வீடுகட்டியாத சாட்சியம் அளித்த நிலையில் அவர் வீடுகட்டி 45 வருடம் இருக்கும் என்று நான் சாட்சி சொல்கிறேனே என்று கேட்டால் எனக்கு தெரிய 45 வருடத்திற்கு முன்பு குப்புசாமி ரெட்டி வீடு கட்டினார். ஏழுமலை ரெட்டிக்கு 3 பெண் குழந்தைகள், 1 ஆண் குழந்தை. அந்த ஆண் குழந்தை இறந்துவிட்டது. ஏழுமலையின் பேரக் குழந்தைகளை

எனக்கு தெரியும் பெயர் தெரியாது. வேலி கம்பியை உடைத்ததாக கூறியிருக்கிறேனே என்றும் வீட்டை சுற்றி வேலி இருக்கிறதா என்று கேட்டால் ஒரு பக்கம் தான் வேலி போடப்பட்டிருந்தது அந்த வேலியை தற்போது என்னை குறுக்கு விசாரணை செய்யும் வழக்கறிஞர் தான் ஆட்களை அழைத்து வந்து வேலியை உடைத்தார். அதை நானும் பார்த்தேன். உடைத்த வேலி எங்கே இருக்கிறதா என்று கேட்டால் ஈஸ்வரி வீட்டு வாசலுக்கு முன்புறம் இருந்தது. என்னுடைய முதல் விசாரணையில் 9வது பாராவில் கிணறு மற்றும் கோயில் இருக்கும் திசையை தவறாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஈஸ்வரியின் வீட்டிற்கு பின்புறம் ஏழுமலை ரெட்டி கிரையம் வாங்கியுள்ளார். அந்த இடம் எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு தோராயமாக கூட தெரியாது. அந்த இடத்தின் அளவு 6, 7 சென்ட் இருக்கும். சர்வே எண் தெரியாது. அந்த இடத்தில் சந்திரசேகர் பிரச்சனை எதுவும் செய்யவில்லை. அந்த இடத்தில் சந்திரசேகருக்கு உரிமையில்லாததால் பிரச்சனை செய்யவில்லை. அந்த இடத்தை ஏழுமலை வாங்கியது வாதிகளின் குடும்பத்திற்கு தெரியும். சந்திரசேகருக்கு அவர் அப்பா எப்போது செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வேலியை உடைத்த பின்னர் தான் பிரச்சனை இருந்தது எனக்கு தெரியும். தற்போது ஈஸ்வரி குடியிருக்கும் இடத்தை அவரது மாமனாருக்கு குப்புசாமி ரெட்டியார் தம்பி என்பதால் விட்டிருக்கலாம். அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் வாதியின் தந்தை முருகன் இறந்து 5 வருடம் இருக்கும்.

அவருக்கு சர்க்கரை வியாதி ஏற்பட்டு கால் விரல்களை வெட்டி எடுத்தார்கள். ஆனால் அவருக்கு மனநிலை எதுவும் பாதிக்கப்படவில்லை. ஈஸ்வரி இருக்கும் வீடு எப்போது கட்டப்பட்டது என்று எனக்கு தெரியாது. வேலி பிரச்சனை வருவதற்கு முன்னர் இருகுடும்பங்களும் பேசிக்கொண்டு தான் இருந்தார்கள். தாவா சொத்துபற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் நான் வாதிகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.